**DEPOSITION OF WITNESS**
**(Chapter XX III Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1**
**RAMANATHAPURAM**
**CASE NO: C.C. 338/2018**
**Deposition of witness for prosecution -PW-4**

| | | |
|---|---|---|
| Name | : | திரு.டாக்டர்.அறிவழகன் |
| Father Name | : | திரு.கனகராஜ் |
| Village | : | திருப்புவனம் |
| Taluk | : | திருப்புவனம், சிவகங்கை மாவட்டம் |
| Calling | : | உதவி அறுவை சிகிச்சை மருத்துவர் |
| Religion | : | இந்து |
| Age | : | 43 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the 13th day of October 2022.

முதல் விசாரணை:

நான் தற்போது இராமநாதபுரம் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் உதவி அறுவை சிகிச்சை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். 16.07.2018ம் தேதி நான் பணியில் இருந்தபோது தேவிபட்டிணம் காவல் நிலையத்தில் இருந்து ஆறுமுகம் என்பவரின் பிரேதத்தை பரிசோதனை செய்ய வேண்டுகோள் கடிதம் பெற்று அதனடிப்படையில் அன்றைய தினமே மதியம் 12.25 மணியளவில் நான் சவக்கிடங்கிற்கு சென்று பிரேத பரிசோதனை செய்தேன். வெளிக்கூறு பரிசோதனையில் அவரது உடல் நன்றாக இருந்தது. உடல் முழுவதும் விறைப்புடன் இருந்தது. சோதனையில் அறியப்பட்ட வெளிக்காயங்கள். 1. தலையின் வலது பக்கத்தில் 6 செ.மீ அளவில் தையல் இடப்பட்ட காயம் இருந்தது 2. சிராய்ப்பு காயங்கள் உட்பிரிவு 1)வலது தலையில் 3X4 செ.மீ அளவுள்ள காயம் உட்பிரிவு 2)வலது கன்னத்தில் 6X5 செ.மீ அளவில் சிராய்ப்பு காயம், 3) வலது முழங்காலில் 3X2 செ.மீ அளவுள்ள சிராய்ப்பு காயம், 4)இடது முழங்காலில் 4X3 செ. மீ அளவில் சிராய்ப்பு காயம், 5) வலது முன்கையில் 3X2 செ.மீ அளவில் சிராய்ப்பு காயம், 6) இடது மணிக்கட்டில் 2X2 செ.மீ அளவில் சிராய்ப்பு காயம், இடது பக்க மார்பில் ஒரு டியூப் பொருத்தப்பட்டு, அதனை எடுத்தபிறகு ஒரு காயம் இருந்தது.

உட்கூறு பரிசோதனையில் உள்ள காயங்கள் பின்வருமாறு,

இடது பக்க விலா எலும்பில் 5, 6 -ஆக முறிவு இருந்தது. இடது பக்க மார்புகூட்டில் 200 மில்லி அளவில் இரத்த கசிவு இருந்தது. இடது பக்க நுரையீரல் சிதைந்து இருந்தது. வயிற்று பரிசோதனையில் மண்ணீரல், இரைப்பை, கல்லீரல், சிறுநீரகங்கள், குடல் வெளிறிபோய் இருந்தது. தலை பரிசோதனையில் மண்டை ஓட்டில் எலும்பு முறிவு எதுவும் இல்லை. வலது பக்க வலது மூளையில் சிதைந்த காயம் இருந்தது. வலது மூளையில் 150 மில்லி அளவில் இரத்தம் உறைந்து இருந்தது. மேற்கண்ட காயங்களின் அடிப்படையில் இந்த நபர் பிரேத பரிசோதனை செய்வததற்கு 12 முதல் 16 மணி நேரத்திற்கு முன்பாக ஏற்பட்ட பலதரப்பட்ட காயங்களால் இறப்பு ஏற்பட்டிருக்கும் என்று சான்று வழங்கினேன். நான் வழங்கிய பிரேத பரிசோதனை சான்று அ.த.சா.ஆ.2 ஆகும். போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

(ஒப்பம்/- எம். சிட்டிபாபு)

நீதித்துறை நடுவர் எண்.1
இராமநாதபுரம்